ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4642

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 6—8—44 | இதழ் 22.

## ★ தேசீயசர்க்கார் வேண்டுமாம்! ★

அரசரை யாரும் குற்றம் சொல்லக் கூடாது, அது நியமத்திற்கு விரோதம், அரசரால் அவர்பேரால் நடந்துவரும் ராஜாங்கத்திலுள்ள குற்றம் குறைகளை யாரும் சொல்லலாம். அதுபோலக் கடவுளை யாரும் குற்றம்சொல்லக்கூடாது, கடவுள் உலகத்தில் அவர்பேரால்நடக்கும் குற்றம் குறைகளை யாரும் சொல்லலாம்.

அரசநீதி நிர்வாகத்தை நடத்தப்பொறுப்பேற்றுக்கொண்டவர்கள், ராஜசின்னங்களை அழகாகஅணிந்து வேலையில் பொய்யெழுதிக்கும்பிட்டு சலாம்போட்டு நின்றால் போதுமா? லஞ்சம் வாங்கலாமா? ஒரு சார்பிலிருந்து ஓரம்சொல்லலாமா? கடமையில்தவறலாமா? கூடாது. அதுபோலவே கடவுள் உலகத்தில் அவர் பேரால் அவர் நீதிமுறைகளைப் போதிக்க ஏற்பட்டவர்கள், கடவுள் சின்னமென்று சிலதை வரிசையாகச் செய்துகொண்டு வாராததும் இல்லாததுமானதைப் பாடிப் புகழ்ந்து கும்பிட்டு நின்றால் போதுமா? பொய்யும் பித்தலாட்டமும் சொல்லி ஏமாற்றிப்பணம் பறித்துந் தன்போக போக்கியங்களிலே கண்ணும் கருத்துமாக விருக்கலாமா? ஒன்றுமறியாதபாமர மக்களை ஒதுக்கித்தள்ளலாமா? நியாயமான உலகப்பொது விதியை உபதேசிப்பதைவிட்டுப் பழயபாட்டையே பாடிக்கொண்டிருக்கலாமா? கூடாது. அதைத்தான் சுயமரியாதைக்காரர்கள் குற்றம் சொல்லுகிறார்களே யல்லாமல், அறிவினுக்கறிவாகி ஆனந்தமயமான ஆதியே என்றும், அறிவிற்கறிவாயறிவிப்பானென்றும் விண்ணிருந்த வெளியாயென்மன வெளியில் கலந்தறிவாய் என்றும், உணர்வே தெய்வமென்றும், பெரியவர்கள் சொன்ன கடவுளை சுயமரியாதைக்காரர்கள் குற்றம் சொன்னதில்லை கடவுள் பேரைச் சொல்லிக் காலட்சேபம் செய்கிறவர்கள், கடவுளைக்காட்டி, ஜாதியாலும், மதிப்பாலும், பொருளாலும் லாபமடைகிறவர்கள் தாங்கள் செய்யும் அக்கிரம அநீதிக்குக் கடவுளுக்குலஞ்சம் கொடுக்கிறவர்கள், அதற்குடைய தரகர்கள், இவர்களே சுயமரியாதைக்காரர்கள் கடவுள் இல்லை என்கிறார்களென்று சொல்லுகிறார்கள். கடவுள் பெண்ஜாதி, வைப்பாட்டி, பிள்ளைகுட்டியோடு வாழாது. அதற்குச் சொல்லும் தத்துவார்த்தமெல்லாம் களவாணிப்புத்தியின் ஏமாற்றுவழி.

ஜனநாயகமென்பது படித்தவர்களுக்கெல்லாம் பொருள் தெரிந்த வார்த்தை. ஜனங்களே அரசுக்கும் அரசாட்சிக்கும் மற்றெல்லாவற்றிக்கும் முதல்வராயிருப்பது ஜனநாயகம். ஜனங்களே இராஜா. ஏற்படுத்திக்கொள்ளுவார்கள், ஒத்துவாராவிட்டால் தள்ளிவிடுவார்கள். இந்த ஜனநாயகம் நமது கடவுளுக்குத் தெரியாதது போலவே, முன் மற்றெல்லாத் தேசத்துக் கடவுள்களுக்கும் தெரியாமலிருந்தது. இப்பொழுது எல்லாத் தேசத்துக்கடவுள்களும் தெரிந்துகொண்டது. அந்தத்தெய்வங்களுக்கு உலகப்பொதுத் தெய்வத்தின் வழி சிக்கலில்லாமல் சுத்தமாயிருந்ததோடு, அதன் புரோகிதர்களும் நியாயவாதிகளும் அந்தத் தெய்வங்களுக்கு வற்புறுத்திச்சொன்னார்கள். எங்கள் அதிகாரத்தை ஒத்துக்கொள்ளாவிட்டால் எங்களூரில் உனக்கு வேலையுமில்லை என்று ஜனங்களும் சொன்னார்கள். தெய்வமும் தெய்வத்தைச் சேர்ந்தவர்களும் பயந்தார்கள். அதுவுமல்லாமல் நியாயம், விடுதலை முதலியவைகளைப்பற்றித் தெரிந்துமிருந்தார்கள். நமது தெய்வங்களுக்கு முன்னும் தெரியாது, இப்பொழுதும் தெரியச்சொல்லுகிறவர்களுமில்லை.

இப்பொழுது உலகத்தில் சொல்லப்பட்டு எல்லாராலும் அங்கீகரிக்கும்படியான நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்பும்படியாய் மனிதர்களுடைய ஜீவன், இலக்கியம், சாஸ்திரம், கலை, ஊர்குடித்தனம் இவைகளெல்லாம் முழுவெள்ளமாகப் பாய்ந்து, மனுஷ ஜாதியை அவமானப்படுத்திக்கொண்டிருந்த பொய்மதாபிமானம், பொய்ப்பக்தி பொய்த்தேசாபிமானம் இவைகளின் கர்வத்தையெல்லாம் பாழ்படுத்திவிட்டன. அதனால் மற்றெல்லா தேசங்களிலும் ஜனநாயகம் உச்சநிலைக்குப்போகிறது. நமது நாட்டிலே ஜனநாயகம் கடவுள் என்னும் பொருளுக்குள் இருக்கலாம். என்றாலும் நாம் கும்பிடும் எந்தத் தெய்வங்களிடமுமில்லை, அவதாரக் கடவுளிடமுமில்லை, அவைகளின் அனுபோகத்திலுமில்லை, அந்தத் தெய்வங்கள் சொன்னவேதசாஸ்திரங்களிலுமில்லை. தெய்வ அவதாரங்களென்கிற ஆச்சாரிகள், தெய்வங்களாகிவிட்ட பக்தர்கள், தெய்வ அருள்பெற்ற பண்டிதர்கள், இவர்கள் செய்த வியாக்யானங்களிலுமில்லை. சாதிக்குரவர்கள், சந்தானகுரவர்கள், சமயகுரவர்கள், சாஸ்திரகுரவர்கள், சர்வவல்லப குரவர்கள், சற்சங்ககுரவர்கள், முதலிய குரவர்கள் சொன்ன தனித்தனி சாஸ்திரங்களிலுமில்லை. இப்பொழுது நமது தெய்வங்களின் பிரதிநிதிகளான லோகக்குருக்கள், மகுந்துக்கள், ஜீயர்கள், மடாதிபதிகள், இவர்களுக்கு ஜனநாயகம் என்றாலே வேஷத்திற்குள்ளிருக்கும் காட்டுமனிதன் வெளியே வந்துவிடுகிறான், மூன்றுவயதில் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டின அம்மன் பார்வதிக்குத்தான் ஜனநாயகம் தெரியுமா? பார்வதி ஜனநாயகத்தைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. புருஷன் நடத்தினதைப் பார்த்ததுமில்லை. ஜனநாயகம் பரமசிவனுக்குத் தெரிந்திருந்தால் சைவ சமணச்சண்டையை ஒரு சார்பிலிருந்து ஓரம்செய்வாரா? பிர்மாவின் தலையில் ஒன்றைக்கிள்ளுவாரா? அம்மனுக்கே ஜனநாயகம் தெரியாமலிருக்கையில் அவர் பாலுண்ட சம்மந்தருக்கு எப்படித் தெரியும்? தெரிந்திருந்தால் வேதமோர் நான்கும் அங்கமோர் ஆறும் விரிசடையும் மார்பில்பூணூலும் விளங்கத் திருப்பரங்குன்றத்தில் பரமசிவன் பார்ப்பாரசாதியாக இருப்பதாகப் பாடியிருப்

(8ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடும்-முஸ்லீம்களும்.

பாஷா.

"இன முன்னேற்றத்திற்கோர் வழி இனத்திற்கோர் எல்லை வகுத்தல்." இன்றைய அரசியல் உலகிலே உலவிவரும் உன்னதக்கருத்து இது. சாய்ந்துவிட்ட சீரிய செங்கோல், வீழ்ந்துவிட்ட வீர அரசு, சரிந்துவிட்ட மணிமாளிகைகள் மீண்டும் பெற்றுப் பேரின்பவாழ்வில்துலங்கவேண்டும்என்றஇன்றையஇஸ்லாமியர்போராட்டம், பல்லர்களைப் பொசுக்கி, வீணர்களை வீழ்த்தித், தாசர்களைத்தாக்கி வெற்றிக் கொடி கரத்தில் ஏந்தி "காணுவோம் வெற்றி, இன்றேல் நாடுவோம் சமாதி" என்ற கீதங்கள்பாடி, முன்னேறி வருகிறது இன்று, இஸ்லாமிய இளைஞர் படை வடக்கிலிருந்து. வஞ்சமே உள்ளமாக, சூட்சியே வாழ்வாகக்கொண்டு, வெள்ளையரைக்கொண்டு வளம்பெற எண்ணித், தாசர்களாய்க்காட்டிக்கொடுத்த ஓர் கூட்டம் ஓலமிடுகிறது, அலறுகிறது, "ஐயோ இனி எம்கதி என்ன?" என்ற ஏக்கத்தாலே. இவர்களது ஓலத்திலோ, அலறலிலோ மனம்மாறிக்கொள்ள இடமில்லை எமக்கு. காரணம், காட்டிக்கொடுத்த கயவாளிகளுக்காக மனமிரங்குவதோ மன்னிப்பதோ திராவிடர்-இஸ்லாமியர் நூல்களிலே கிடையாது.

நெறிதவறா அரசிலே, இனப்போராட்டத்தைப் பொசுக்கித்தள்ளியஇஸ்லாமிய வேந்தர்களுலகிலே, பொக்கிஷமும்களஞ்சியமும் திறக்கப்பட்டது இவர்களது ஏழ்மையை நீக்கி, வாழ்க்கையைவளம்பெறச் செய்யவேண்டுமென்று. ஊரார் உடைமையை உண்டதுபோதாதெனப், பொக்கிஷத்தையும், களஞ்சியத்தையும் காலி செய்து, கர்ணபரம்பரை என நாவாரப் போற்றி, கைகூப்பி வணக்கம் செய்த வஞ்சகர் கூட்டம், நாட்டைக்காட்டிக் கொடுத்தால் அடைவோம் ஓர் சிற்றரசு என, சிந்திய மூக்கினராய், கண்ணீரும் கம்பலையுமாய்ப் பொய்க்காட்சி காட்டிக் கூறினர் வெள்ளையர்களிடம் "ஏ! வேந்தர்க்குலமே, கூடிவாருங்கள் காட்டிக் கொடுக்கிறோம்"என்று.பாழும்பார்ப்பன ஆட்சி பல்லாண்டு பாங்குடன் பறந்தபச்சைப் பிறைக்கொடியை சாய்த்தது, இஸ்லாமிய வேந்தர்கள் வாழ்ந்தமாளிகைகளிலே வெள்ளையர்களைவாழச்செய்தது, வாகுடன் வாழ்ந்த இனத்தை வஞ்சக வாள்கொண்டு வீழ்த்தியது, புலால் தீர்ந்ததும் புசிக்கச்செய்தவன் மேல் பாயும் புலிப்போல. நாட்டை அலங்கோலப் படுத்திய அந்த ஆரியம் இன்று வாழ்வு கண்டு, "அக்ரஹாரஸ்தானிலே" தனிச் சுகம், சலுகைகொண்டுகொழுத்துவாழுகிறது. வாழ்வோடு திருப்திக்கொள்ளாமல் மன்னே குழி பறிக்கிறது. இவர்களுக்கு வாழஇடம் வகுத்தளித்து, உடுக்கப்பட்டாடை யளித்து, உண்ண உணவளித்து சர்வத்தையும் தாரை வார்த்த இஸ்லாமியச்சமுகம் இளித்தவாயினராய், ஏக்கமே இருப்பிடமாய், சோகமேஆரமாய்ப்பூண்டு, அல்லல்கள்பலஉற்று கண்ணீர் ஆறாய்ப்பெருக ஆயாசப்பட்டுள்ளது இன்று. இந்தச்சமயம் தான் கொட்டினார் முரசு "கூடுங்கள் ஒன்றாய் இஸ்லாமியர்களே! என்று.

நம் திராவிட நாட்டிலே நச்சரவக்கூட்டம் வெள்ளையர் முன்னிலையில் நடத்திய நர்த்தனம், புராணப்புரட்டுஆகியவைகளை விளக்க இவ்வேடுகள் போதாது, ஒரு மேடை போதாது. சாதி, சமயம், பிறப்பு இவைகளை ஆதாரங்காட்டி, ஆடுமாடு மேய்க்கவந்த ஆண்டிகள் கூடி மக்களை மடையராக்கி, மானியமும், தானியமும் தட்டி, தலையிலே சட்டியைக் கவிழ்த்து, கழுத்திலேஉருத்ராட்சம் கட்டிவிட்டு, கையிலே தடிகொடுத்து, உடலெல்லாம் வெண்சாம்பல் பூசிவிட்டு, காஷாயஉடை தரிக்கச்செய்து,அண்ணாமலைக்கரோகரா, ராமா, ராமாவெனநாமமோதிக்கொண்டு சென்றுவா காசிக்கு உன் கருமம்களைந்துவிடும் என்று அனுப்புவதும், தன்இனம், கலை, நாகரிகம்மறந்த திராவிடன் மோட்சத்திலே மோகங்கொண்டு ஓடுவதும் நாம் தினசரி காண்கிறோம். விரித்துத்தீட்டினால் வந்துவிடும் கோபம் வைதிகத்தோழர்களுக்கு,இந்தச் சு. மா. காரர்கள் இதர இனத்தவர்களை விடுத்து நம் மதத்தை தூற்றுகிறார்களென்று. ஆகவே விடுக்கிறோம்.

இந்நிலையில் தான்ஊதினார் சங்கு, ஓடிவாபோருக்கு, பண்டைய நிலையடைய நீ பண்புடன் வாழ, திராவிடப் பூங்காவிலேபாங்குடன் புகவென வெண்தாடி வேந்தன், திராவிட நாட்டுத்திருத்தந்தை நமது பெரியார் ஈ. வே. ரா. புறப்பட்டும் விட்டது சுயமரியாதைப்படைதன் இலட்சியத்தைக் குறிக்கோளாகக்கொண்டு.

இன்றைய அரசியல் மேடையிலேகருத்தைச்செலுத்தினால், திராவிடர் கட்சி, முஸ்லிம்லீக், காங்கிரஸ் இம்மூன்றும் ஒரே இலட்சியத்திற்காகப் போராடுகின்றன. இந்நாட்டிலிருக்கும் அயலான்ஆட்சி அழியவேண்டுமென்பதே ஒவ்வொரு கட்சியின் பிரதானநோக்கம். தனித்தனிமனிதன், அவனது இனம் உரிமைபெற வேண்டுமென்பது திராவிடர், இஸ்லாமியர்போராட்டம். இதற்குமாறாக பூதேவர் ஆட்சிவேண்டும் என்று ஆர்ப்பரிப்பது தான் இக்காங்கிரஸ் கூச்சல்

நாடாளும்நோக்கத்தில் கருத்துவேறு பாடிருந்தாலும், பொது எதிரியாக் கருதுகிறது வெள்ளையர்களை நம்நாட்டுக் கட்சிகள். அதைப்போலவே வதைப்பட்ட இஸ்லாம், ஒடுக்கப்பட்ட திராவிடமும் போது பொது எதிரியாகக்கருதுகிறது இப்பார்ப்பனியத்தை.

திராவிடஇஸ்லாமியர் பலர் சிலகேள்விகளைக்கேட்கின்றனர், சுயமரியாதைப் படையில்சேரும் தோழர்கள்மேல் சீறிப் பாய்கின்றனர், இஸ்லாமியருக்கும் திராவிடநாட்டுப் பிரிவினைக்கும் சம்பந்தமென்னவென்று. அவர்களுக்கு அதிகம் தீட்டாது சுருங்கச்சொல்லி விளங்க வைக்கிறோம். அன்றைய திராவிட பாக்கியராசன்தான் இன்று ஓர் திராவிடஇஸ்லாமிய பாஷாவாகவும், அன்றைய திராவிட மதிபூர்ண அம்மைதான் இன்றைய மஹமூதாபேகமாய் திகழுகிறார்களே தவிர அரப்நாட்டிலிருந்து, குடியேறியவர்களோ, இல்லை ஆகாயத்திலிருந்து குதித்தவர்களோஅல்ல. கண்ணாடி ஒன்றானாலும் அதன்முன்நின்று பார்ப்பவர்கள் முகங்கள் வேறாக, அதன்களைவேறாகக் காட்டுகிறது. அதேபோலத் திராவிடத் தோழர்கள் இன்று இஸ்லாமியர்களாகவும், கிருஸ்தவர்களாகவும் திகழ்ந்தபோதிலும் பிறப்பினால் திராவிடர் என்பதை மறுக்கவோ, மறைக்கவோ மறக்கவோ முடியாது என்பதே எம்துணிபு. எதிர்ப்பிருந்தாலும் அது பகுத்தறிவுக்குகந்ததல்ல. பிறப்பு ஒன்றானால், மொழி ஒன்றானால் நாடுவேறு என்றுகூற இயலாது. ஆகவே திராவிடநாடு எம்முடையது என்றுணரும் இஸ்லாமியர், நாட்டுப் பிரிவினையில் பங்கெடுப்பதில் குற்றமோ கண்ணியக்குறைவோ அடையமுடியுமா?

உலகஇஸ்லாமிய சகோதரத்துவத்திற்காகப், பாக்கிஸ்தான்பிரிவினைக்காக,இஸ்லாமியர் இலட்சியத்திற்காக சம்சாரத்தை காணிக்கையாக அளிக்கலாம். ஆனால் அதுபோலவே நமதுதாய்நாடு, நமது மொழிஇவைகளின் விடுதலைக்காக நமது சிரம்கொடுக்கச் சித்தமாயிருக்கவேண்டுமென்பதையும், நமது இஸ்லாமிய இளங்காளைகளுணரவேண்டும். உணர்ந்து ஓடோடிவரவேண்டும், விடுதலைக்காகப் போராடவேண்டும், இதில் சந்தேகமோ, சக்தியின்மையோ காணும் தோழர்கள் கேட்டால் விடுப்போம் ஆதாரத்துடனே

(7-ம் பக்கம் பார்க்க)

# அந்த இடத்தில் வெற்றி முழக்கம்.

எள்போட்டாலும் சத்தம் கேட்கும் என்பார்களே! அதைப்போலத்தான் இருந்தது அன்றைய, கோகலேஹால். பத்திரிகை நிருபர்கள் தமதுகடமையைக் கூடமறந்து, அண்ணாந்து பார்த்து இரசித்தவண்ணமிருந்தனர். நல்ல அமைதி. ஆனால் இடையிடையே கட்டிடம் அதிரும்படியான கைதட்டல்கள். அதிலேயிருந்து எதிரொலிக்கும் சிரிப்பு ஆரவாரம். மகிழ்ச்சியும் உணர்ச்சியும் இரண்டறக்கலந்து இளைஞரின் முகத்தில் அழகும் வீரமும் ததும்பி நின்றன. கூட்டமோ, கட்டிடம் கொள்ளவில்லை. குறித்தபடி குழுமியிருந்தனர். மக்களைக்கவரும், கருத்துள்ள, பேச்சுக்கள் பேசப்பட்டன. 30—7—44-ல் சென்னைவந்து இந்தக் காட்சியைக் காணாதவர், சந்தர்ப்பத்தை இழந்தவர்களே! சென்னை மாவட்ட 5-வது சுயமரியாதை மாநாடு, அன்று அவ்வளவு சிறப்புடன் நடந்தேறியது. தங்கவயல், தோழர் ஜே. சி. ஆதிமூலம் அவர்கள் வீரஉரையாற்றித் தன்மானக் கொடியைஉயர்த்தினார். சேலம்கல்லூரித் தலைவர்தோழர்இராமசாமி எம். ஏ. எல். டி. அவர்களின்துணைவியார் தோழியர் கனகம்மையார். அவர்கள்,தமிழரின்மான வாழ்வின் சிறப்பைக்கூறி மாநாட்டைத் திறந்து வைத்தார். உடல்நிலை ஊறுகாரணமாக வரமுடியாத நிலையில், தோழர் செ. தெ. நாயகம் அவர்கள்அனுப்பியவரவேற்புச் சொற்பொழிவை, சுயமரியாதைவீரர். தோழர், எஸ். குருசாமி, பி.ஏ. அவர்கள், உணர்ச்சியுடன் படித்து முடித்தார். தோழர். குடந்தை நீலமேகம் அவர்கள், தலைமை ஏற்றார், தோழர்கள் பொன்னம்பலனாரும், டி.சண்முகம்அவர்களும், தலைவரை ஆதரித்து அருமையாகப் பேசினர். இருவாரங்களுக்கு முன், 16—7—44-ல் திருச்சி சு. ம. மாநாட்டில் தலைமைதாங்கிப் பேசிய புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள். எவ்வளவு வீரமும், உணர்ச்சியும் கருத்தும் ஒன்றி, முழக்கஞ் செய்தனரோ, அதைப்போன்றே தோழர். கே. கே. நீலமேகம் அவர்களின் பேச்சு அமைந்திருந்தது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடு இன்றைய சுகாதாரவாழ்வுக்கு எவ்வளவு இடையூறு? அந்தப்பழயகாலத்தில் கையாளப்பட்ட, உணவு முறை, இக்காலத்திற்கேற்றதாகுமா? அக்காலக்காட்டுமிராண்டிகள் மரப்பட்டைகளை உடுத்திக்கொண்டிருந்தனர். இக்கால மனிதர்கள் அதனைஏற்று நடப்பரா? இன்று காலம் விஞ்ஞானத் துறையில் முன்னேறிச் செல்கிறது. ஆகவே அந்தக்காலத்துக், காட்டுமிராண்டித்தனத்திற்கு, இலக்காகவிளங்கும், புழுத்த கொள்கைகள் நிறைந்தபுராண இதிகாசங்கள் இப்போது எதற்குப்பயன்படும்? பயன் படாதது மட்டுமின்றி, நமது மானத்திற்கு அழிவுதேடும் ஆரியத்திற்கு ஆக்கந்தரும்'' அந்த ஆரியநச்சு ஏடுகளைத், தீயிலிட்டுக்கொளுத்தவேண்டாமா? என்றதோழர் நீலமேகம் முழக்கஞ் செய்த போது, ஆரியம்அலறியது, பகுத்தறிவற்ற பண்டிதத்தன்மை, .பதறியது என்றால், மிகையாகாது.தோழர்நீலமேகம்அவர்கள் மேலும் பலஅரிய கருத்துக்களை விளக்கித் தலைமை உரையை முடித்த பின்னர், தந்தை, பெரியார் அவர்கள், சுயமரியாதை இயக்கம், என்பது குறித்து நீண்டநேரம்பேசி, இயக்கத்தின் படிப்படிவளர்ச்சியையம், இந்த இயக்கம், தனது, உன்னதத்தன்மையால்உலகத்தை ஆளப்போகிற தென்பதையும், நுணுக்கமாக விளக்கினார்கள். நீதிக்கட்சியை, நமது இயக்கம் தன்னுள்ளே, அடக்கஞ் செய்துவிட்டது. சமயம் நேர்ந்தால் இந்தக்காங்கிரசைக்கூட நமது இயக்கம் விழுங்கி விடும் என்றார் பெரியார். பிற்பகல் தோழர் நெடுஞ்செழியன் பி. ஏ. (ஹானர்ஸ்) சரித்திரச்சான்றுகளும்இலக்கிய மேம்பாடுகளும் நிறைந்த திராவிட நாகரிகத்தின் மேன்மையை விளக்கிப் பேசினார். புரட்சிக்கவியின் சிறப்பைப் பற்றிஅன்பழகன்அருமையாகப்பேசினார். நாகம்மையார் தொண்டைப்பற்றி,தோழர் பொன்னம்பலனார் அவர்கள் உருக்கமாகவும் உணர்ச்சியுடனும் அநுபவ பூர்வத்துடனும்பேசியகாட்சி, மாநாட்டிலே தனிச்சிறப்புடையது. பின்னர் விருதைத் தலைவர் இராவ்பகதூர் வி. வி. இராமசாமி அவர்கள் பொருளாதாரத் துறையின் உற்பத்திவகையிலே, வடநாட்டாருக்குத், திராவிடம் அடிமைப்பட்டிருப்பதைப் புள்ளிவிபரங்களுடன், அறிவுரையாற்றினார். அதற்குப்பிறகுஆங்கிலத்திலே டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், லீக்தலைவர் ஜின்னா அவர்களின் [லாகூர் பிரசங்கத்தின் சாராம்சத்தையும், ஆச்சாரியாரின் சூழ்ச்சித்திட்டத்தின் போக்கைப்பற்றியும் விளக்கிப் பேசிவிட்டு அமர்ந்தார். பின்பு தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் சுயமரியாதை இயக்கம், ஜஸ்டிஸ் கட்சியின், இடதுகையாக விளங்கவேண்டுமென்னும் சிலரின் கூற்றுக்கு பதிலுரைத்துவிட்டு, சுயமரியாதைஎண்ணங்களும், தத்துவங்களும் தான், இனி, ஜஸ்டிஸ் கட்சியின் திட்டங்களாகஇருக்கும் என்றுகூறித், திராவிடர் கழகம் என்றபெயராலே, ஜஸ்டிஸ்கட்சி இயங்கவேண்டுமென்பதை எடுத்துக் கூறினார். பின்பு பெரியார் அவர்கள் போலித்தலைவர்களின் தன்மையை எடுத்துச்சொல்லிப் பெரியதொரு சமுதாயப் புரட்சிக்கு இளைஞர்கள் தயாராகவேண்டும், அதற்கு இப்போது நல்ல சந்தர்ப்பம் என்றுஆவேசமான சொற்பொழிவுசெய்தார். பின்னர்பலஉருவானதீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேறி இரவு 8 மணிக்குப் பெரியார் வாழ்க,திராவிடநாடு திராவிடருக்கே என்ற பேரொலியுடன் வெற்றிமுரசு கொட்டினாற்போல், காலத்தின் வேகத்தையும், வளர்ச்சியையும் அறியாது பண்டித மணிகள் கம்பன் விழாக் கொண்டாடிச் சித்தங்கலங்கித் திகைத்து நின்ற அந்த இடத்திலே வெற்றி முழக்கத்துடன் மாநாடு முடிந்தது.

---

## இராமநாதனர் கல்விக்கூட மாணவர் இலக்கியக் கழகம்.

[illegible] ஜூலை 20.

சென்ற 16—7—44 மாலை 6 மணிக்கு குலசேகரன் பட்டினம் இராமநாதனார் கல்விக்கூடமாணவர் இலக்கியக் கழகத்தின் சார்பில் திரு. செ. தெ. நாயகம் அவர்கள் தலைமையில் ஓர்பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சென்னைப்பல்கலைக் கழகத்தின் இசைப்புலமைக்குரிய பாடத்திட்டத்திற்கென எடுக்கப்பட்டுள்ள பாடல்களுள் 100க்கு 97 பங்கு தெலுங்கு பாடல்களாக இருப்பதைஅறிந்து தமிழ்ப்பாடல்கள் புறக்கணிக்கப்பட்டமைக்காக இக்கூட்டம் பெரிதும் வருந்துகிறது. இப்பட்டம் தமிழர்களுக்கும் உரியதென்றால் 100க்கு 100 தமிழ்ப்பாடல்களாகக் கொண்ட ஒருபாடத்திட்டம் ஏற்படுத்தி 'இசைப்புலவர்' அல்லது 'இசைவாணர்' என்ற பட்டத்தை அளிக்குமாறு பல்கலைக்கழக ஆட்சியாளரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## சமுத்திரம், ஆ. தி. முன்னேற்ற லீக், தாராவி, பம்பாய்.

15-7-44ல் ஷை லீகின் நான்காவது கூட்டம் தோழர் S. S. நடேசன் அவர்கள் தலைமையின்கீழ் நடந்தது. தோழர்கள், ஆறுமுக நாயகம், பெருமாள், முதலியோர்கள் பொருளாதாரம், சங்க வளர்ச்சி முதலியவற்றைக்குறித்துப்பேசினார்கள். பின் புதிதாக இருமெம்பர்கள் சேர்க்கப்பட்டார்கள். பின், காரியதரிசியால் நன்றியுபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

---

## மறைவு.

நமது திராவிட நடிகர் கழக உறுப்பினர் தோழர் போளூர் கே. சுப்ரமணியம் அவர்களின், ஆண்மகவு, வீராசாமி 1—8—44ல் மறைந்ததைக்கேட்டுமனம் வருந்தினோம். குழந்தையின் பிரிவால்துயருறும் பெற்றோருக்கு, நமது அநுதாபத்தைச் செலுத்துகிறோம்.

# திராவிட நாடு.

காஞ்சி 6—8—44 ஞாயிறு


## போலியின் கேலி.

''அடி அலமு! ஏண்டி இப்படிப்பிராணனை வாங்கிண்டிருக்கே. பேசாமே, போய்ப்படு, இருமலைக்கொஞ்சம் அடக்கிக்கொள்ளவேணும், என்ன செட்றது? கர்மம் யாரைவிட்டது? சனீஸ்வரர் சன்னதிக்குவிளக்கு ஏற்றச்சொன்னேனேசெய்தாயோ?'' என்று, இருமல் நோயை இரண்டே நாளிலே தீர்த்துவைக்கும் அற்புதச்சூரணம் தயாரித்த ஆயுர்வேத வைத்யர் நாடிப்பரீட்சை நிபுணர் நாகபூஷண ஐயர், இருமல் நோயினல் இரண்டாண்டுகளாக இம்சைப்படும் தமது இல்லக்கிழத்தியிடம் கூறுகிறார்.

''நான் நாலுநாளாகச் சொல்லிக்கொண்டுதானே இருக்கிறேன், நாலு வேளை மருந்து சாப்பிடாமல் இந்த நாசமாய்ப்போன வயற்றுவலி தீராது என்று. கேட்டால்தானே.'' என்று, வாழ்க்கைப் பட்டவளிடம் கூறுகிறார், சகலரோக நிவாரணத்துக்குச் சக்திபூஜை செய்து தாயத்துதரும் மந்திரமாடசாமி.

இந்த இருவரும் எங்கே இருக்கின்றனர் என்று கேட்கவேண்டாம், எங்கும் உண்டு இது போன்ற போலிகள்.

அந்த வைத்தியன் தயாரித்த மருந்து இருமலை நீக்குவதாய் இருந்தால், அதே நோயால் நொந்துகிடக்கும் தனது மனைவியைச், சனீஸ்வரன்கோயிலுக்கு விளக்கு ஏற்றும்படியா உபதேசம் செய்திருப்பான்.? அது போலவே மந்திரத்தின் உதவியால் நோயைப்போக்கமுடியுமென்ருல் அந்த மந்திரவாதி, தன்மனைவியின் வலி தீர மருந்து உட்கொள்ளச் சொல்வானு!

போலிகளின் சரக்கு, ஏமாளிகளுக்குத்தானே விற்கப்படும்! இஸ்லாமியர் ஏமாளிகளல்ல!! எனவே ஆச்சாரியாரின் சரக்கு அங்கு விலையாக வில்லை.

ஆயுர்வேத நாகபூஷணத்துக்கும் மந்திர மாடசாமிக்கும், ஒப்பாக, எமது அரசியல்தலைவர் ஆச்சாரியாரைக் கூறுவதா, துடுக்குத்தன மல்லவா இது, என்று கோபத்துடன் கேட்கத்தான் காங்கிரசாருக்குத் தோன்றும். நாம், கேலிக்கல்ல இங்ஙனம் கூறினது. சற்றே சிந்தனையைச் செலவிட்டால்-சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்களுக்கு மட்டுமே கூறுகிறோம்-போலிவைத்திய பூஷணத்தைப் போலவே, மந்திர மாடசாமியைப் போலவே, ஆச்சாரியாரின் அறிவிலே முளைத்ததிட்டமும், அவர்வாழுமிடத்துக்குப் பயன்தருவதாக இல்லை என்பது விளங்கும், அதன் பயனாக அவருடைய போக்கின்தன்மையும் விளங்கி விடும்.

சக்கிரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்சுயராஜ்யத்தை வரவிடாமல்தடுக்கும் பெரிய தடையைப் போக்கி, வெள்ளையர் அடிக்கடி வீசும் நிந்தனையை நீக்கி, விடுதலையைக்காண விழைகிறாராம்! அதற்காக, அரும்பாடுபட்டு, ஜனாப் ஜின்னாவின் பாதத்தைத்தொட்டு, முத்தமிட்டு, ''ஜனாப்ஜீ! இனியேனும்பாரதமாதாவின் தளைகளை உடைக்க வருக!'' என்று அழைக்கிறாராம். என்றபோதிலும் அந்த ஜின்னா, பிடிவாதமாக இருக்கிறாராம்!!

இது இன்றைய அரசியல் நிலைமை என்று ஏடுகளிலே எழுதப்பட்டிருக்கிறது.

பசியுடன் இருப்பவனுக்குப்பழங்கஞ்சி கொடுத்தாலும் பரிவோடு எடுத்துப்பருகுவான், ஆனல் கஞ்சிக்கலயத்திலே கடுவிஷத்தைக்கலந்து காடியை ஊற்றித்தந்தால் பசிபோக்கிக்கொள்ள வேண்டி அதையார் பருகுவர்! அதுபோலப் பாக்கிஸ்தானுக்காக இதுவரை பாடுபட்டு, பரங்கியின் எதிர்ப்புக்கும் பனியாவின் சூழ்ச்சிக்கும் வீழாமல் நிமிர்ந்து நின்று போராடும் ஜனாப் ஜின்னா, உண்மையாகவே, பாகிஸ்தான் ஆச்சாரியாரால் அளிக்கப்பட்டால், பெற்றுக்கொண்டு நன்றி கூறவா, தயங்குவார்? பாகிஸ்தான்என்ற போர்வையிலே ஆச்சாரியார், ஜின்னா முன்பு, காட்டியது ஒரு கந்தல்ஸ்தான்!! பார்வைக்குப் பீதாம்பரம், பிரித்தாலோ அதன் உள்ளே எண்ணற்ற கிழிச்சல்கள்! அதுபோலப் பெயரளவிலே பாகிஸ்தான் என்று கூறினர் ஆச்சாரியார், ஆனல் நடைமுறையிலே அது கேவலம், மாடு மேய்ந்த வயல்போல இருக்கும் விதமானது. ஜில்லாவுக்கு ஜில்லா ஓட்எடுத்து, எங்கெந்த ஜில்லாவிலே முஸ்லீம்கள் பெருவாரியாக இருக்கிறார்களோ அங்கு ஓட்எடுத்துப், பார்க்கவேண்டும் என்று கூறுகிறார் ஆச்சாரியார்.

எந்தத் தொடர்ச்சியான, பரந்த பிரதேசங்களிலே, முஸ்லீம்கள் பெருவாரியாக உள்ளனரோ, அந்த இடங்களை இணைத்து ஒருஅரசாக்குவதுதான் பாகிஸ்தான் திட்டம்-லாகூர் தீர்மானத்தின்படி. ஆச்சாரியாரின் பாக்கிஸ்தானமோ, ஒரு கேலிஸ்தான்!! இதை ஜனாப்ஜின்னா வன்மையாகக் கண்டித்து விட்டார்.

''பாகிஸ்தான் தரநான் இசைகிறேன், காந்தியாரும் கனிவுடன் இதற்குச் சம்மதம் அளித்திருக்கிறார், ஆனல், பிரிட்டிஷாரை விரட்ட, சுயராஜ்யத்திற்காக வேலைசெய்ய ஜனாப் ஜின்னா சம்மதித்தால் தான், பாக்கிஸ்தான் தர நான் சம்மதிக்க முடியும்'' என்று ஆச்சாரியார் கூறினர்.

ஜனாப்ஜின்னா, ஏதோ சுயராஜ்யத்தைப் பெறவேண்டுமே என்ற அக்கரையே இல்லாதவர் போலவும், இந்தக்காங்கிரஸ்சூரர்களுக்கு மட்டுமேதான் சுயராஜ்யத்தைப்பற்றிய சிரத்தை இருப்பது போலவும், அடிமை மனப்பான்மையிலே இருக்கும் ஜின்னாவுக்குப் பாக்கிஸ்தானைப் பரிசாகத் தந்தாகிலும், சுயராஜ்ய வேட்கையை அவர் உள்ளத்திலே கிளப்பவேண்டி இருப்பது போலவும், ஆச்சாரியார் பேசியிருக்கிறார். ஜனாப் ஜின்னா, சுயராஜ்யத்தின் விரோதி என்று கருதியது போக்கிரித்தனம். அதனை வெளிப்படக் கூறாது போக்கிரித்தனத்துடன் கூடிய [illegible] மாப்பு! ''கூலி'' போலப்பாகிஸ்[illegible] தருகிறோம் என்ற மனப்பான்மை[illegible] கூறுவது, மமதையின் விளை[illegible] மடமை!

ஜனாப் ஜின்னா, ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியும் ஏமாளியல்ல, போம்பேசும் பூர்ணய்யா அல்ல, காட்டிக்கொடுக்கும் கௌடல்யர் அல்ல, கைக்கூலிகேட்கும் அமீர்ச்சந்து அல்ல, ஆண்மையின் அறிகுறி, இஸ்லாமியரின் எழுச்சிச்சின்னம், ஏகபோக உரிமையாளரின் பகைவன்! ஆச்சாரியார், ஜனாப் ஜின்னாவைப் பாமர மக்கள் தவருகக் கருதும்படிச்செய்யும் முயற்சிபலிக்காது. இந்தப் போக்கிரித்தனமான பேச்சு சமரசத்துக்கு வித்து அல்லவே! என்று ஜனாப் ஜின்னா கூறியிருக்கிறார்.

ஆச்சாரியார் வலிய அணைக்கச்சென்றும், ஜனாப் ஜின்னா விலகி நிற்பதாகப் புகார் செய்கிறார், ஆனல், ஜனாப்ஜின்னா ''வரவேண்டியவர்வரட்டும்'' என்று ஆச்சாரியாருக்குக் கூறிவிட்டார். கடைசியில், தூதுதோற்றுப் போகவே, தரகர்வேண்டாம் என்று ஜனாப்ஜின்னா கூறிவிடவே, காந்தியார், ''வருகலாமோ!'' என்று இன்று பாடுகிறார்.

எந்த ஜின்னாவை ஒரு தலைவர்என்றோ பொதுநலத் தொண்டர் என்றோ மதிக்கவும் மறுத்தனரோ, அவரைநாடி, அவதார புருஷர், அந்தராத்மாவுடன் பேசுபவர், போகிறார்!! முஸ்லீம்களுக்கு இவராபிரதிநிதி, அபுல்கலாம் அஜாது இல்லையா, எல்லைப்புறக் காந்தி இல்லையா, எத்தனையோ உபயதுல்லாக்கள் இல்லையா, அல்லா பிச்சைகளுக்குப் பஞ்சமா, என்று பேசிக்கிடந்த காலம்போய், இஸ்லாமியருடன் சமரசம்தேட, ஜனாப் ஜின்னாவைத்தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கு [illegible]வசிராய்மாளிகையை உபவாசத்தாலேயே மிரட்டும் ''உத்தமகுணவித்தகர்'' (!) காந்தியார் வந்துவிட்டார்.

''ஆகஸ்ட்மாத இறுதியிலே, பம்பாயிலே, எனது மாளிகையிலே வந்து காணலாம்'' இது பத்துகோடி முஸ்லீம்களின் பாதுகாவலர் அனுப்பிய [illegible]த்தின் சாரம் எமது எம்மான், [illegible] மாதா பெற்றெடுத்த பெம்மான், காந்தி

எனும் பெயர்படைத்த சீமான், அவர் பெயரைக்கேட்டால் பிரிட்டிஷ் படை பீதி அடைகிறது, வைசிராய் விடியவிடிய விழித்துக்கிடக்கிருர், அமெரிக அலறுகிருர், அகில உலகும் புகழ்கிறது, என்றெல்லாம், காங்கிரஸ்காரர் பராக்குக்கூறியது ஒரு நேரம்! இப்போது அந்தத் தற்பெருமைக்குச்சரியான காரம் கிடைத்திருக்கிறது. இங்கே இரண்டே கட்சிகள், ஒன்று சர்க்கார், மற்றொன்று காங்கிரஸ்! இரண்டே விதமான ஆயுதங்கள், ஒன்று துப்பாக்கி, மற்றொன்று தக்ளி! இந்த முழக்கம் இன்று எங்கே? முஸ்லீம்லீகை அஹ்ரார்கள் எதிர்க்கிருர்கள், மஜ்லீஸ்கள் எதிர்க்கிருர்கள், ஷியாக்கள் எதிர்க்கிருர்கள், அஜாத் முஸ்லீம்கள் எதிர்க்கிருர்கள், காக்சார்கள் கண்டிக்கிருர்கள், ஹக்கினர் அதட்டுகின்றனர், எல்லைக் காந்தியின் படை விரட்டுகிறது, என்று பேசியும் எழுதியும், வந்த பெருமதியினர் எங்கே?

முஸ்லீம்லீக், அடிமைகளின் முகாம், பிரிட்டிஷாரின் செல்லப்பிள்ளை, சுயராஜ்யத்தோருக்கு முட்டுக்கட்டை, என்று நாக்கில் நரம்பின்றி நிந்தித்த நேயர்கள் எங்கே?

பதவி வேட்டைக்காகப் பணக்கார முஸ்லீம்கள் சிலர்கூடிக்கொண்டு பாமர முஸ்லீம்களை வஞ்சிக்கிருர்கள் லீக்என்ற பெயரைக்கூறி, இனிப்பாமர முஸ்லீம்களிடம் நாம் தொடர்புகொள்வோம், லீகை ஒடுக்குவோம் என்று உரைத்தகுள் எங்கே! எத்தகைய எதிர்ப்பையும் வெட்டிவீழ்த்தவல்ல பாரதமாதாவின் வாள் எங்கே! பரந்த இந்தியாவைப் பரிபாலிக்கும் உரிமைபெற்றது என்று வர்ணிக்கப்பட்ட தோள் எங்கே! எங்கே அன்றைய இறுமாப்பு!

காந்தியார், ஜனுப்ஜின்னுவைக்காணச் செல்வது கேட்டுக் கேலிசெய்வதல்ல நமது நோக்கம். காந்தியார், செல்ல இசைந்ததால் ஜனுப் ஜின்னுவின் கீர்த்தியும் மதிப்பும் அதிகரித்துவிட்டது என்று நாம்கூறவில்லை, ஜனுப் ஜின்னுவுக்குக்காந்தியார் இந்தக் கனிவுகாட்டுவதற்கு முன்பே, கீர்த்தியும் மதிப்பும் உண்டு என்பது தெரிந்திருப்பதால். நாம்கூறுவது, நிலைமை எப்படியாகும், என்பதை உணர்ந்து உரைபாடும் சக்தி இன்றிக் காந்தியர்கள் அந்த நாளிலே பேசினரே, அந்தப் போக்கு மிகமிகத் தவருனது என்பது இப்போதாவது அவர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காகவேஇதனைஎழுதினுேமே தவிர, வீண்பெருமைகொண்டல்ல. தேர்தலிலே வெற்றிபெற்ற உடனே, செல்லுமிடமெங்கும் செருக்குடன் நடந்தவர்கள் இன்று, செக்குமாடுகளாகிவிட்ட காட்சி, சிந்தனைக்கு உரியது.

காந்தியாரை, மகாத்மா என்று மாநிலமுழுதும் விளம்பரப்படுத்தினர். அவர் சாதாரணமானவரல்ல, அவதாரபுருஷர் என்று கூறினர். அவர்சொல்லும் செயலும் அவருடைய அறிவின் விளைவுகள் என்று கூறவில்லை, அவ்வளவும் அந்தராத்மா அவருக்கு அருள்புரிவதாகும் என்று உபதேசித்தனர். அவர் இமாலயத்தவறுபுரிவார், கங்கைபோல் கண்ணீர் உகுப்பார், ஆனுல் அவரே கண்கண்டதெய்வம் எனறு கூறினர். அவருடைய கைத்தடி, பிரிட்டிஷ்படையை விரட்டியடிக்கும் மந்திரக்கோல் என்று மொழிந்தனர். அவர் இந்தியாவுக்குத் தலைவர் மட்டுமல்ல, ஆசியாவின் ஜோதி, அதுமட்டுமல்ல, அகிலஉலகுக்கே அகிம்சாமூர்த்தி என்று அகவல்பாடினர். இந்தியாவை மட்டுமல்ல, உலகுக்கே அந்த உத்தமரே விடுதலை வழங்குவார் என்றனர். சீடகோடிகளின் சிந்து, பக்தகோடிகளை மயக்கத்திலே வீழ்த்தியதுஅல்ல வேடிக்கை, குருவையே மயக்கத்திலே ஆழ்த்திவிட்டது. அவ்வளவு அளவுமீறிக் காந்தியார்மீது பஜனை பாடினர். மற்ற எந்தத் தலைவரும், பிரிட்டிஷாரின் கையாள் என்று சாடினர், இன்று, என் செய்கின்றனர், இந்த நாப்பறையாளர் என்று கேட்கிறேம்.

இவ்வளவு பூஜைக்கு உரியவராகி, ஆஸ்ரமவாசியாகி, அந்தராத்மாவின்விசுவாசியாகியகாந்தியாருக்கு 'சரி, ஆகஸ்ட்டு மாதத்திலே, பம்பாயிலே என் மாளிகையிலேவந்து என்னைப்பார்க்கலாம்" என்று எழுத ஜனுப் ஜின்னுவுக்கு எப்படிமனந் துணிந்தது? காந்தியாரின் கட்டளையை வேதமாகக்கருதுவோர் கணக்கற்றவர் உள்ளனரே இங்கு. அவர், கனவிலே தோன்றினுலும் கைகூப்பித்தொழுமனை தனவான்கள் உள்ளனரே! சிற்றரசர்களும் சீமான்களும் அவருக்குச் சேவை செய்யச் சித்தமாக உள்ளனரே, அப்படிப்பட்ட மகானை, கொடுமுடிக்கோகிலமும், தேசிகவிநாயகரும், நாமக்கல்லாரும், நாவலர் கலியாணசுந்தரனும் ஏத்திஏத்தித் தொழும் தேவனை, மாளிகை மாடியிலே நின்றுகொண்டு மக்களுககுத் "தெரிசனம்" தரும்திவ்ய சொரூபனை, வெள்ளைமாது பணிவிடை புரியும் படியான பேறு பெற்ற பெம்மானை, ஒரு வகுப்புவாதி, ஏகாதிபத்ய தாசர், சமரசவிரோதி "வீட்டுக்கு வா," என்று அழைப்பதா, அதைக்கேட்டுக் கொண்டுநாம் வெட்கத்தால் ஒரு முழக்கயறுதேடாமல் நிற்பதா, என்று காந்தியர்கள் சஞ்சலப்படத் தேவையில்லை. ஜனுப்ஜின்னு, இவ்வளவு "காந்திப்புராணம்" நாட்டிலே குவிந்தபிறகும், காந்தியாரை, சாதாரணமான ஒருதலைவராக மட்டுமேமதித்து, அவருடைய மகிமையையோ, மகாத்துமாத் தன்மையையோ கண்டு மயங்கமறுக்கும் காரணம், அவருடைய இஸ்லாம்! ஆம்! இஸ்லாம் மனிதனைத் தேவனுக்கும் தாசருக்கு இடம் அளிக்காது. அவதாரபுருஷர்களும், திருத்தூதர்களும், அடிக்கடிவருவார் என்று நம்பவேண்டாம் என்றுஇஸ்லாம்போதிக்கிறது. அவர்கள் நபிகள் நாயகம் அவர்களே இறுதிநபி என்று கோட்பாடு கொண்டவர்கள், எனவே மனிதரைத் தேவதூதனுக்கும் செயலுக்கு அவர்கள் மதிப்பளிக்கமாட்டார்கள். இந்துக்களுக்கு அப்படியல்ல! இமைகொட்டுவதற்குள் ஒரு புதுத்தேவன் வரக்கூடும்! மனித உருவில் மட்டுமல்ல! மச்சம், கூர்மம், வராகம், வானரம், மரம், எத்தனையோ உருவிலே வரக்கூடும் என்ற பித்தலாட்டத்தைப் பெரியதோர் உண்மைஎன்று நம்பும் ஏமாளித்தனம் இந்துமார்க்கத்தவரிடம் குடிகொண்டிருக்கிறது, எனவே அவர்கள், காந்தியாரைத் தயக்கமின்றிக் கடவுள் அவதாரமென்று ஏற்றுக்கொண்டனர். இஸ்லாம் இதனை மறுக்கிறது, இஸ்லாமியரின் இணையில்லாத் தலைவராம் ஜனுப்ஜின்னு, காந்தியாரைத் தமது மாளிகைக்குவந்து பார்க்குமாறு சொன்னதன் மர்மம் இது தான், காந்தியாரை ஒரு மகாத்மாஎன்று ஏற்க, இஸ்லாமியப் பண்பிலே தேறிய ஜின்னுமறுக்கிருர். இது முற்றிலும் முறையே!! இஸ்லாத்தின் பண்பும் பயிற்சியும், எவ்வளவு விளம்பரம்தரப்பட்டாலும், எத்தனை நூறுபத்திரிகைகள் நித்தநித்தம் புகழ்பாடினுலும், எத்தனை பிரசாரகர்கள் ஆதரவுதேடித் திரட்டினுலும், யாரையும்மனிதத் தன்மைக்கு மேம்பட்டவராக நம்பும்படியான நிலைமையை உண்டாக்காது என்பதை உணராமலேயே காங்கிரசார், காந்தியாரின் மகாத்துமாத்தன்மையைமட்டுமே நம்பினர், இன்று மனம்வெம்பினர். மொட்டைச்சாமி, குட்டைச்சாமி, கட்டைச்சாமி, கோவணச்சாமி, நிர்வாணச்சாமி, மௌனச்சாமி, உண்ணுவிரதச்சாமி, பொன்செய்யும்சாமி, பொட்டைக்கண்ணைத்திறக்கும்சாமி, மன்னர்சாமி, மடச்சாமி, என்று, யாரையும் தேவனுகக்கொள்ளும் கோணல்புத்தி இந்துக்களிடம் இருப்பதாலேயே, காந்தியாரை மகாத்மாவாக்கி, அரசியலுக்குஅதிபாரக்க முடியும் என்று காங்கிரஸ் சூத்திரதாரிகள் துணிவுபெற்றனர்.

யார், யாரைப்போய்ப் பார்க்கிருர்கள் என்பது ஒரு புறமிருக்கட்டும். இந்த சந்திப்பின்போது, காந்தியார், தமது மகாத்மாமகிமையைநம்பிக்கொண்டிருப்பாரானுல், காரியம் சித்தியாகாது. இஸ்லாமியப் பண்புதெரிந்த இணையில்லாத்தலைவர், இஸ்லாமியரின் ஏகப்பிரதிநிதியிடம் பேசுகிறேம் என்ற நினைப்புடன், பேச வேண்டும். எவ்வளவோ, தூற்றித் துவைத்து, மிதித்து அழித்திட முயன்றும், முடியாததாலேயே இன்று ஜின்னுவைக் காணவந்திருக்கிறேம் என்பது காந்தியாரின் நினைவிலிருக்க வேண்டும். சில ஆண்டுகளுக்குள், முஸ்லீம்களை ஒரே முகாமிலே கொண்டுவந்து சேர்த்ததீரனிடம் உரையாடப் போவதை உள்ளத்

( 6-ம்பக்கம் பார்க்க )

# போலியின் கேலி.

5-ம் பக்கத்தொடர்ச்சி

திலே நிறுத்தவேண்டும். ஆஸ்ரமவாசிஎன்பதற்காகவோ, ஆட்டுப்பால் அருந்துபவர் அரைநிர்வாணி, அகிம்சாமூர்த்தி என்ற காரணங்களுக்காகவோ, மதிப்புக்கொடுப்பவர் ஜனாப் ஜின்னா அல்ல என்பதை மனதிலே பதியவைத்துக்கொண்டு, கவைக்கு உதவக்கூடிய திட்டத்தைப் பற்றிக், கள்ளம் கபடமின்றி, ஒருபதம் இருபொருள் என்ற முறையிலே இல்லாமல், திறந்தமனதுடன் திட்டமாகப்பேசிடுவதே நலன்தரும். இப்போது காங்கிரசாரின் கைவசம்இருக்கும் ஆச்சாரியாரின் திட்டம்நாம் கூறியிருக்கிறபடி, மந்திரமாடசாமி, ஆயுர்வேத ரசபூஷணம் போன்ற போலிகளின் திட்டம். அதை ஆதாரமாகக்கொண்டு "காரிய சித்தி" அடைய முடியாது.

ஏன், ஆச்சாரியாரின் திட்டத்தைப் போலிதிட்டம் என்றுகூறுகிறோம் என்றால், உண்மையிலேயே ஆச்சாரியாருக்கு இன எழுச்சியை உணர்ந்து இனஅரசு அமைக்கவேண்டுமென்பதிலே இருதய பூர்வமான அக்கரை இருக்குமானால், எந்தப் பாகிஸ்தானுக்குப் பரிந்து பேசுகிறாரோ, அந்தப்பாகிஸ்தான் கோரிக்கை பிறக்க இரண்டாண்டுகள் இருக்கும்போதே பிறந்த, திராவிடநாடு தனிநாடாக அமைதல் வேண்டும் என்றகோரிக்கையைக் கவனித்து அதற்கான திட்டத்தைத் தயாரித்திருப்பார். பாகிஸ்தானுக்கு எவ்வளவு தேவை இருக்கிறதோ அவ்வளவு தேவை திராவிடநாடுவுக்கும் இருக்கிறதென்பதை உணருவார். அதற்காவன செய்வார். அதைவிட்டார், ஆயிரம்மைலுக்கு அப்பால்சென்று "அன்பு அளிப்பு" இதோ என்றுகூறுகிறார். இதை எப்படி நம்புவது? மனைவிக்குஇருமல், மருந்துதரவில்லை வைத்யர், அவர் இருமலைக் குணப்படுத்தும் சூரணம்இருப்பதாகப்பிறருக்குக் கூறினால், அதுபோலிதானே! அதுபோலத்தான் இருக்கிறது ஆச்சாரியாரின்போக்கும். அந்தப்போலி நம்மைக்கேலிசெய்கிறார் நமது கோரிக்கையைக் கவனிக்க மறுத்து! பாகிஸ்தானுக்காகக் கிளர்ச்சி பலமாக இருக்கிறது, ஆகவே, ஆச்சாரியார் அதனைக் கவனிக்கிறார், நமது திராவிடநாடு தனிநாடாக வேண்டுமென்ற கோரிக்கை தேங்கிக்கிடக்கிறது ஆகவேதான் ஆச்சாரியார் அதைக்கவனியாமலிருக்கிறார் என்று சிலர் கூறுகின்றனர். பாகிஸ்தானுக்காகநடத்தப்படும் அளவு கிளர்ச்சி, திராவிடநாடு பெறசெய்யப்படவில்லை என்பது உண்மையே! ஆனால்நீதியைநெறியாகக்கொண்டவர்கள், இதனைத்தக்கதோர் காரணம் என்று கூறக்கூசுவர். யூகம் தெரிந்தவர்களுங்கூட, இன்று அவ்வளவு வலிவாகக் காணப்படவில்லை என்பதற்காக, வளர்ந்து வலிமைபெறக்கூடிய கோரிக்கையைக் கவனிக்க மறுக்கமாட்டார்கள். ஆச்சாரியார் நீதிக்கோ, யூகத்துக்கோ, கட்டுப்பட்டவரானால் முதலிலே திராவிடநாடு தனிநாடு ஆவதற்கான கிளர்ச்சியைக்கவனித்து, அதற்கோர், சமரசத்திட்டம் தயாரித்துவிட்டுப் பிறகு விந்தியமலைக்கு அப்புறம் சென்றிருப்பார். அங்ஙனம்செய்யாமல், இங்குள்ள திராவிடரின்வேண்டுகோளைக் கேளாக்காதிலே வாங்கிக்கொள்கிறார்! இன்றையவேண்டுகோள், நாளைக்குக்கட்டளையாகிவிடும் என்று அரசியல் அரிச்சுவடிகூறும். அதைப்படிக்க மறுக்கிறார்! ஒற்றுமையுடன் ஒரு கொடிக்கீழ்நின்று உறுதியுடன் உரைத்ததால், இனஅரசுக்கு வழிகிடைக்கப்பெற்றனர் இஸ்லாமியர். ஆச்சாரியார், அடிக்கமுயன்றார் முடியாதுபோகவே இஸ்லாமியரின் அடி வருடுகிறார்என்பது திராவிடருக்குத் தெரிய வந்தால், திராவிடநாடு திராவிடருக்கே என்றமுழக்கம், கேளாக்காதையும்கேட்க வைக்கும்!! திராவிடரே! உமது உரிமையைக்கேட்கவாய்இல்லையா! இனஎழுச்சி, கட்டுப்பாடு, கிளர்ச்சி, ஆணவக்காரரை ஆட்டுக்குட்டிகளாக்கி, ஆர்ப்பரிப்பை ஆலாபனமாக்கி, கசையடி தந்தவரைக் காவடிதூக்கச்செய்துவிட்ட காட்சியைக்காணஉங்கட்குக் கண்கள் இல்லையா!! திராவிடஇனம், தனி அரசு அமைக்கவேண்டும் என்றுஉறுதிகொள்ள மனம்இல்லையா! வீரர் இங்கே இல்லையா! விழியற்று, மொழியற்று, வாழ்வழியற்று, ஒரு இனம் நடமாடுவானேன்! சுடலை இருக்குமிடம் தெரியாததாலா!!

## வாசகர்களுக்கு.

30—7—44-ல் வெளிவரவேண்டிய "திராவிடநாடு" சில அசந்தர்ப்பத்தால் தபாலில் அனுப்ப முடியாமற்போய்விட்டது. இவ்வாரம் சென்ற வாரப்பத்திரிகையையும் சேர்த்தனுப்புகிறோம். வாசகர்கள் தாமதத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

## 'கலையும் வாழ்வும்'

14-8-44, திங்கள் மாலை 5-15-க்கு, தாம்பரத்தில், சென்னைக் கிருஸ்தவக் கல்லூரித் தமிழ்ப்பேரவையின் ஆதரவில் தோழர் C. N. அண்ணாத்துரை M. A; "கலையும் வாழ்வும்" எனும் பொருள் பற்றிப்பேசுவார். அனைவரும் வருக!

க. துரைஅரசு, அமைச்சன்.

## தமிழ் இளைஞர் கழக

### 2-வது ஆண்டு நிறை விழா.

சென்னை, வண்ணையம்பதி
தனலட்சுமி வித்தியா சாலையில்,
(ராபின்சன் பார்க் அருகாமையில்)
13—8—44 ஞாயிற்றுக்கிழமை மாலை
5-மணிக்கு, சென்னைநகர தேசியப்
போர்முனை ஆர்கனைசர்
ராவ்பகதூர்,
J ஆல்பர்ட் ஜேசுதாசன் B. A;
அவர்கள் தலைமையில்,

திராவிடநாடு ஆசிரியர்,
C.N. அண்ணாதுரை M. A;
(திராவிடநாடு ஏன்பிரிக்கப்படவேண்டும்)
K. அன்பழகன் B.A; (Hons)
(திராவிடரும் ஆரியரும்)
V.R. நெடுஞ்செழியன் B.A;(Hons)
(இந்துமதமும் புராணங்களும்)
S. குஞ்சிதம் அம்மையார் B.A; L.T;
(பெண்களின் நிலைமை)
என்பனபற்றிச் சொற்பொழிவாற்றுவர்
தோழர்கள் வருக.

குறிப்பு.-ஒலிபெருக்கி அமைக்கப்படும்.

## சங்கீதச்சிரோமணி.

1—8—44ல் திண்டுக்கல் காஸ்மாபாலிடன் கிளப்பில் தமிழ்இசைச் கழகம் ஆதரவில் ராவ்சாஹேப் உயர்திரு M. S. P. சோலை நாடார் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்ற மாபெரும்பொதுக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம்- சென்னைப் பல்கலைக்கழகத்தார் துடங்குவதற்கு உடன்பட்டுள்ள சங்கீதச்சிரோமணி வகுப்பிற்கு அமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தில் 66 பாடல்களுள் 64 பிறமொழிக் கீதங்களும் 2 தமிழ்ப்பாடல்களுமாக வகுத்துள்ளதனை இப்பொதுக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், தமிழ் இசையை இகழ்வதற்காகச் செய்துள்ள இக்கொடுஞ்செயலின் பரிகாரமாக பெரும்பகுதிப் பாடல்களைத் தமிழில் இருக்கும்படிசெய்யவேண்டும். இன்றேல் இதனை தெலுங்கு சங்கீத சிரோமணியெனப் பெயரிட்டு தனிப்பட தமிழ் இசைப் புலவர் வகுப்பு ஒன்றினைத் தொடங்கவேண்டுமென்றும் இவற்றினை நிறைவேற்றத் தவறுவார்களானால் இழிவுபடுத்தஎண்ணி அமைக்கப்பட்டுள்ள 2 பாடல்களையும் அதனின்றும் எடுத்துவிடும்படியாகவும் சென்னைப் பல்கலைக்கழகத்துணைவேந்தர் அவர்களை வற்புறுத்திக்கேட்டுக்கொள்ளுகின்றது.

## சென்னையில்
# சந்திரோதயம்.

### சு. ம. சங்கத்துக்கு ரூ. 2000.

பெரியார், ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையில், சென்னைச் சுயமரியாதைக் கழகத்தலைவர் தோழர் T. சண்முகம் அவர்கள் ஆதரவில், சென்னைத் திராவிடத்தீரர்கள் தோழர்கள், N. V. நடராஜன், P. செல்வராஜ், கணேசன், சிவஞானம், S. குருசாமி, A. C. இராமன், கபாலி, பிரகாசம், தர்மாம்பாள் அம்மையார் ஆகியவர்களுடைய அரிய முயற்சியினாலும், மங்களபாலகான சபையினரின் பேருதவியினாலும், நகைச்சுவை அரசு தோழர் N. S. கிருஷ்ணன், இசைஅரசு தோழர் தண்டபாணித் தேசிகர், இசைநாடகஒளி M. K. தியாகராஜ பாகவதர் எனும் கலைமுடிபூண்ட மூவர் முன்னிலையிலும், விருதுநகர் நகராட்சித் தலைவர் தோழர் V. V. இராமசாமி, குடந்தைத் தளபதி தோழர் K. K. நீலமேகம், காஞ்சித் தங்கவேலர், மன்னார்குடி பாபுசெட்டியார், நீடாமங்கலம் தோழர் ஆறுமுகம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, கோலார் ஆதிமூலம், பூவாளூர் பொன்னம்பலனார், குடந்தைப் பாவலர், மாணவமணிகள் நெடுஞ்செழியன், அன்பழகன் ஜெனார்த்தனம் ஆகிய இயக்கத்தோழர்கள் வீற்றிருக்க, நடிகமணிகள், N. சாரங்கபாணி, K. R. இராமசாமி, D. பாலசுப்பிரமணியம், K. T. சந்தானம், சம்பங்கி, மாதவன், தட்சணாமூர்த்தி, எதிராஜ், கிருஷ்ணமூர்த்தி, M. S. முத்துகிருஷ்ணன், ஆகியோரும் டைரக்டர்மணி, நாடகப்பேராசிரியர் T. P. பொன்னுச்சாமிப்பிள்ளை, ஆகியோரும்,படமுதலாளிகள், A. S. A. சாமிகலைவிற்பன்னர்கள், மற்றும் தோழியர்கள்தேவசேனா, தருமாம்பாளம்மையார்,குஞ்சிதம்அம்மையார்மலர்முகத்தம்மையார்,மனோன்மணி அம்மையார், ஆதிலட்சுமி அம்மையார், கனகசுந்தரம் அம்மையார், ஆகிய, இயக்கத்தாய்மார்கள் வீற்றிருக்க, திரளாகவந்திருந்த தமிழர்முன்பு, 31—7—44ல், சென்னை ஒற்றைவாடை தியேட்டரில், காலஞ்சென்ற இந்தி எதிர்ப்பு வீரர்கள் நடராஜன், தாலமுத்து நினைவுக்குறிகட்டவும், சென்னைச் சுயமரியாதைச்சங்கவேலைக்காகவும்நிதிஅளிக்கச் சந்திரோதயம் நாடகத்தைக் காஞ்சித் திராவிட நடிகர் கழகத்தார்நடத்தினர்.

நாடகம்முடிந்ததும், கலை, இனஎழுச்சிக்கு உதவவேண்டும் என்பதுபற்றிப் பெரியார் பேசினார்.

கலைத்துறையிலே, நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன், இசைநாடக ஒளி M. K. தியாகராஜ பாகவதர்,இசைஅரசு தண்டபாணி தேசிகர் ஆகியமூவர்இன்று முடிதரித்துத் தமிழருக்குப் பெருமை தந்துவருவதைப்பாராட்டிப்பேசிவிட்டுச், சந்திரோதயநாடக வசூலில் செலவுபோக மிகுந்த 1100 ரூபாயைத், தோழர் அண்ணாத்துரை, தோழர் T. சண்முகம் அவர்களிடம் அளித்தார்.

பிறகு, நகைச்சுவை அரசரும் இசை அரசும், இசைநாடகஒளியும் மேடைக்கு அழைத்துவரப்பட்டனர். அவர்களைக் கண்டதும், மக்கள் மகிழ்ச்சிப்பெருக்குடன் வரவேற்றனர். மூவருக்கும் மாலை சூட்டினர். தோழர் M. K. தியாகராஜ பாகவதர், கேட்டுக்கொள்ள, தோழர் N. S. K. கலையின் நிலைபற்றியும், அன்றைய நாடகத்தைப்பற்றியும் எடுத்துக்கூறிவிட்டுச்,சுயமரியாதைச்சங்க வேலைக்காக, பாகவதரும் தாமும்சேர்ந்து 900 ரூபாய் அளிப்பதாகப், பெருத்தகர கோஷத்திடையே கூறினர்.

நாடகம் சிறப்புறநடந்தேற, ஒற்றைவாடைத்தியேட்டர், உடை, ஜோடனை முதலிய வசதிகளை அன்புடன் அளித்தார் தோழர் N. S. K. நாஞ்சில் திலகர் நடாத்திவரும் நகைச்சுவை அரசின் ஆஸ்தான மணியாகவிளங்கும் நாடகப் பேராசிரியர் தோழர் T. P. பொன்னுச்சாமி பிள்ளை அவர்களும், மங்களபாலகான சபா மானேஜர் தோழர் எதிராஜு அவர்களும், நாடகத்துறை அனுபவம் அதிகமில்லாத எமக்குச்செய்த உதவியின் காரணமாகவே, நாடகத்தை வெற்றிகரமாக நடத்தமுடிந்தது. மங்களபாலகான சபை நடிகத் தோழர்கள் அனைவருமே எம்மிடம் அன்புகாட்டி ஆதரித்தனர். மேற்படி சபையின், சீன், விளக்கு, மேக்அப்அமைப்புத்தொழிலில் உள்ளதோழர்கள், அக்கரையுடன் எமது நாடகத்திற்கு உதவினர். இவர்கள் அனைவருக்கும், காஞ்சித் திராவிடநடிகர் கழகத்தாராகிய நாங்கள் எமது நன்றியறிதலைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

"காஞ்சி திராவிடநடிகர் கழகத்தார்."

## மதுரை இலவசவாசகசாலை.
## 2-வது ஆண்டு விழா.

17—7—44 மாலை 6-30 மணிக்கு புதுவை திரு. பாரதிதாசன் அவர்கள் தலைமையில் மிக்கசிறப்பாய் நடைபெற்றது. காரியதரிசி அறிக்கைக்குப்பின் திருவாளர்கள் காணுடுகாத்தான் வைசு. சண்முகம், பெரியார்படத்தையும், A. வேணுகோபால் திராவிட நாடு படத்தையும் திறந்துவைத்தார்கள். தோழர்A. பொன்னம்பலம், T. நாராயண பிள்ளை, B. A; B. L; K. R. சத்தியேந்திரன், முகமத் ஷரீப், சார்லஸ் அம்மையார் முதலியோர் சொற்பொழி வாற்றினர்கள். ஒலி பெருக்கியும், அலங்காரப்பந்தலும், ஜனத்திரளும் சிறப்பான காட்சியளித்தது. இரவு 12-மணிக்குக்கூட்டம்இனிது முடிந்தது.

## திராவிடநாடும், முஸ்லீம்களும்.

2ம் பக்கத் தொடர்ச்சி.

பதில் என்பதையும் எடுத்துக்கூறி விடுகிறோம். எமது இஸ்லாமியத் தோழர்களுக்கு நமதுவேண்டுகோள், திராவிடர்-இஸ்லாமியர்கொடிகளை இருகரங்களிலேந்தி வடக்கே நமது காயிதேஆஜம் முஹமதலி ஜின்னாவைத் தளபதியாகவும், தெற்கே பெரியார் ஈ. வெ. ரா.வைத்தளபதியாகக்கொண்டு, நமது உரிமைகளைப் பெற, இழந்த பாங்கானவாழ்வைக்காண நமது நாடு நாமடைவோம் என்றகீதங்கள்பாடி, சுயமரியாதை வாளேந்தி, வெல்லுவோம், என்ற இடிமுழக்கம் செய்து வெற்றி நமதே என்ற சங்கநாதம் தெற்கே ஊத, வென்றுவிட்டோம் என்ற முரசு வடக்கேகொட்டப்புறப் படுவோம்.

வாழ்க பாக்கிஸ்தான்!

வாழ்க திராவிடநாடு!

---

# எங்கே?

(புதுவைச் சிவம்.)

யாதும் ஊரே, யாவருங் கேளிரென்
றோதிய தமிழர் உயர்நெறி எங்கே?
பிறவியில் யாவரும் சமமெனப் பேசிய
அறநெறி வள்ளுவன் அருளுரை எங்கே?
மதமோர் படுகுழி! மல்கிய சாத்திரம்
அதிபெருங்குப்பை ஆதலால்விடுமினென்
றோதிய அறிஞரின் போதனை எங்கே?
முயற்சி யுடையார் இகழ்ச்சி பெருரென
அயர்ச்சி நீக்கியோர் அருமொழி எங்கே?
அறிவும் ஆர்ந்த கல்வியும் கேள்வியும்
நிறைகவென் றுரைத்தோர்
நேர்மொழி எங்கே?
தன்மதிப் பழியாத் தகைமை பெறுதலே
வன்றிறற் றமிழரின் வாழ்வின் சீரெனக்
கவரிமான் நிலையினை உவமையாய்க்
கழறிய
மானத் தமிழரின் மாண்புரை எங்கே?
வேம்பகை காணின் வீரமோ
டொழித்தலும்
தம்புகழ் பரவிடத் தகும்பணி யாற்றலும்,
அன்பு பெருக்கலும் அறச்செயல்.
விளைத்தலும்,
வன்பு தவிர்த்தலும் மறச்செயல்
நீக்கலும்
இன்ப வாழ்வை இனிதுற அமைத்தலும்,
துன்ப வாழ்வைத் தொலைத்தலும்,
தமிழரின்
கடமைஎன் றுரைத்தநற் கட்டளையாவும்
எங்கே என்தமிழ் நாடே?
எங்கே உன்சீர்? என் குறைபாடே?

# திருவாரூர் வாரீர் திரண்டு!

**திருவாரூர் கருணாநிதி தியேட்டரில்**

**18—8—44**

**வெள்ளி இரவு**

**10-30 மணிக்கு,**

பழயகோட்டை இளையகுமார
பட்டக்காரர்,
தோழர்
**என். அர்ச்சுனன்,**
அவர்கள் தலைமையில்,
காஞ்சித்
திராவிட நடிகர் கழகத்தாரின்
சமுதாய சீர்திருத்த நாடகம்
நடைபெறும்.

## சந்திரோதயம்

டிக்கட் விபரம்:—
ரூபா 5, 2, அணா 8.

கிடைக்குமிடம்:—
P. V. O. இராஜகோபாலன்,
காசுக்கடை விஜயபுரம்.
கோ. அண்ணாமலை,
கலைப்பைமார்க் சுருட்டுகம்பெனி,
ஆண்டார் தெரு, திருவாரூர்.

இங்ஙனம்,
M. A. ஆறுமுக நாடார்,
(முனிசிபல் கௌன்சிலர்) தலைவர், சந்திரோதய நாடக அமைப்புக் கமிட்டி.

V. பார்த்தசாரதி நாயுடு.
M. துரைராஜ்,
துணைத்தலைவர்கள்,

P. V. O. இராஜகோபாலன்,
M. K. ஜெம்புலிங்கம்,
செயலாளர்கள்.


தேசீய சர்க்கார். 1ம் பக்கத்தொடர்ச்சி

பாரா? தன்னைப்போல ஒரு சிவபக்தன், எண்பது வயதான அப்பர் சாஷ்டாங்கமாகவணங்கினால் வாரிஎடுத்து பல்லக்குச் சுமக்கவிடுவாரா? இவர்களுக்கெல்லாம் ஜனநாயகம்தெரியாமலிருக்கையில்நமக்கு மட்டும் எப்படி வந்துவிடும்.

இப்பொழுது நாம்கேட்கிறபடி தேசீய கவர்மெண்டு கிடைத்துவிட்டால் அதில் ஜனநாயகம் நடக்கவேண்டுமே எப்படி நடக்கும்? நமக்குத் தெய்வத்தைவிட்டால் நரகம், ஆச்சாரியைவிட்டால் பாவம், புரோகிததர்மத்தை விட்டால் புண்ணியமில்லை. இந்த நிர்ப்பந்தமானநிலைமையிலிருக்கும்நாம் உலகப்பொதுவிதியாலும் உலகப்பொதுக் கடவுளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகத்தை வேண்டுகிறோம். ஜனத்தின் ஜீவசக்திக்கும், சாதியின் நிபந்தனைகளுக்கும், போர்நடக்கும் இந்தக் காலத்தில் அதைவஞ்சிக்க முடியாது. கடவுள் கட்டளையென்றும், சமயசாஸ்திர நிச்சயமென்றும், சனாதனதருமமென்றும், சிஷ்டாச்சாரமென்றும், ஏய்க்கவுமாகாது, வாய்ச்சாமார்த்தியத்தினால் வழக்கிட்டு ஒருமூலையில் ஒதுக்கிக்கிடக்கவும் சாத்தியமில்லை. எப்படியும் ஜனநாயகப்பொறுப்புவந்துவிடும், அதைநாம் தெரிந்துபேசிச்சபையில் ஒப்புக்கொள்ளுவதுபோலவே அனுபோகத்தில் நடந்துகொள்ளத் தேர்ச்சியடையவேண்டும். நம்முடைய விஸ்வாசம், பக்தி, எண்ணம், செய்கை, நம்பிக்கை முதலியவைகளெல்லாம் தெய்வங்களிடமும் பழக்கவழக்கங்களிடமும் பற்றுடையதாக விருக்கிறது. தெய்வத்திற்கும் அதைச்சேர்ந்தவர்களுக்கும் ஜனநாயகம் தெரியாதது மட்டுமல்ல, நேர்விரோதமாகவுமிருக்கிறது. அவர்களைவிட்டால் நமக்குக் கதிமோட்சமில்லை என்று நினைக்கிறோம். இந்நிலைமையையுடைய நாம் தேசிய கவர்மெண்டை வைத்து நடத்துவது எப்படி? நடத்துவதாய் இருந்தால், ஒன்றோநமது தெய்வம், ஆசாரி, பூசாரி, புரோகிதர்களுக்கெல்லாம் ஜனநாயகத்தைக் கற்றுக்கொடுத்து அதன்வழிநடக்கச் செய்யவேண்டும். அல்லது அவர்களைவிட்டு விலகவேண்டும். இந்த இரண்டில் ஒன்றைச் செய்யாவிட்டால் ஜனநாயகம் எப்படி நடக்கும் என்பதை நமது நாட்டு அறிஞர்களே சொல்லுங்கள். கோயிற்கட்டுக்கும், புரோகிதப் புரட்டுக்கும் குருட்டுத்தனமாகக் கட்டுப்பட்டிருந்த தளையை வெட்டித் தன்மதிப்பை காக்கக்கற்ற ஜாதியாரே உலகில் ஜனநாயகப்பாதையில் சென்றார்கள் என்பதைப் படித்தவர்களே சொல்லுங்கள்.

"விண்ணிறைந்த வெளியாய் மனவெளியிற் கலந்தறிவாம்" கடவுளைச் சுயமரியாதைச்சங்கம் குற்றம் சொன்னதில்லை. குற்றம் சொல்லவந்ததுமன்று.

இங்ஙனம் **கைவல்யம்.**

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.